[10th September 1958

* 81 *Q*.—Sri S. LAZAR :
Sri M. KARUNANITHI : } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details about the establishment of the raw film manufacturing factory at Ootacamund, Nilgiris district and the products that are to be manufactured;

(*b*) whether the plant has arrived in India and what is its cost; and

(*c*) whether the plant has been erected and if not, the reasons therefor?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) *to* (*c*) A final decision has not yet been taken by the Government of India on the question of establishing a factory at Ootacamund for the manufacture of raw photographic film. The matter is still in the exploratory stage.

Leather Research Institute

* 90 *Q*.—**Sri N. R. THIAGARAJAN :** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

திண்டுக்கல்லில் தோல் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்த ஏதேனும் உத்தேசமுண்டா ?

The Hon. Sri R. VENKATARAMAN : No, Sir.

Sri N. R. THIAGARAJAN : எங்கள் பாண்டிய நாட்டிலே தோல் உற்பத்தி, தோல் பதினிடும் தொழில் ஆகிய இரண்டும் மேன்மையாக இருக்கிறது. அவசியம் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை வந்திருக்க வேண்டும். அதை இனிமேலாவது பரிசீலனை செய்வார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் பாண்டிய நாட்டுக்கு வேண்டுமென்றால் சோழ நாட்டுக்கு வேண்டும், சேர நாட்டுக்கு வேண்டும் என்ற கேள்வி எழும். கொங்கு நாட்டைப் புறக்கணித்துவிட்டதாக நிதி அமைச்சர் கேட்கலாம். நாட்டுப் பிரச்னை வேண்டாம். இப்போது செண்டிரல் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் உலகத்திலேயே புகழ்பெற்ற ஸ்தாபனமாக இருக்கிறது. அது நமக்கு வேண்டிய உதவியை அளித்துக் கொண்டிருக்கிறது.

Industrial Training Institute

* 94 *Q*.—**Sri A. VEDARATHNAM :** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பார்களா—

(அ) சமீபத்தில் புதிய தொழில் பள்ளிகள் துவக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

(ஆ) அப்படியானால் எங்கெங்கே ?

(இ) இவர்களுக்கு பரீட்சை உண்டா ? அப்படியானால், அதில் தேறியவர்களுக்கு என்ன அத்தாட்சி அளிக்கப்படுகிறது ?

(ஈ) இதில் தேறியவர்கள் அரசாங்கத்தில் என்ன வேலை பார்க்கத் தகுதியுடையவர்கள் ?

(உ) அதற்கு ஏற்பட்ட சம்பள விகிதம் என்ன ?